22 JAN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 ஏப்ரல் 20.

சித்திரை 8, துன்மதி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

உழவு செய்ய முடியாமல் உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்குவதால், உழவு செய்கின்றவர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Hosur and Denkanikottah as Hill area.

*Q. No. 792—Thiru T. Venkata Reddy : Will the Hon. the Minister for Finance be pleased to state :—

Whether the Government propose to declare the area of Hosur and Denkanikottah as Hill Area ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தற்போது இல்லை என்றாலும் இனிமேலாவது அறிவிக்கும் உத்தேசம் உண்டா ? தற்போது அறிவிக்காததற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவ ரவர்களே, ஆயிரம் மீட்டருக்கு மேலே உள்ள பகுதிகளைத்தான் மலைப்பிரதேசமாக அறிவித்து, அங்குள்ள பணியாளர்களுக்கு மலைவாழ் பணிப்படி வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற ஓசூர், தேன்கனிக்கோட்டை பகுதிகள் நில அளவையினர் கூற்றுப்படி ஆயிரம் மீட்டருக்கு மேற் பட்டவில்லை; அந்த நிபந்தனை நிறைவேற்றப்படாமல் இருப்

பதன் காரணமாக அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை; அந்த இடங்களை மலைவாழ் டணிப்படி வழங்கும் இடங்களாக அறிவிக்கவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, மலைவாழ் பகுதியாக வேறு எவை, எவை எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை; தனிக் கேள்வி போடவும்.

பெரிய தாழையில் ஐஸ் பிளாண்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 793—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சாத்தான்குளம் தொகுதி பெரிய தாழையில் அமைக்க திட்டமிட்டு வேலை செய்ய தேவையான உபகரணங்கள் சேகரிக்கப்பெற்ற ஐஸ் பிளாண்ட் வேலை வருடக்கணக்கில் தொடங்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், காரணமென்ன?

(இ) வேலையை விரைவில் முடிக்க உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சாத்தான்குளம் தொகுதி பெரியதாழையில் பனிப்பொறி மற்றும் குளிர்பதன நிலையம் (Ice plant cum cold storage) ஒன்று அமைப்பதற்கான பணிகளை முடிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) மின்சார வாரியம் நிலையத்திற்கான மின் இணைப்பை 17—1—1981 அன்று வழங்கியுள்ளது. இயந்திரங்களை நிர்மாணிக்க இன்னும் சில கட்டிடப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இக் கட்டிடப் பணிகள் 1981 மே திங்களுக்குள் முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின் நிலையம் செயல்படத் தொடங்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS